செ.வெ.எண்:47 நாள்: 29.12.2016

# மாநில அளவிலான தேக்வாண்டோ போட்டியில் வெற்றி பெற்ற வீரரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில் மாநில அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான தேக்வாண்டோ போட்டியில் வெற்றி பெற்ற வீரரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.12.2016) நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான தேக்வாண்டோ போட்டிகள் திருப்பூரில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது மாவட்டத்தின் சார்பாக பெண்கள் குழுவில் 6 நபர்களும், ஆண்கள் குழுவில் 6 நபர்களும் என மொத்தம் 12 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 68 கிலோ எடை பிரிவிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் திரு.பழனிச்சாமி என்ற வீரர் மூன்றாம் இடம் பெற்று ரூ.50000 பரிசுத்தொகை, பதக்கம் மற்றும் கேடயத்தை பெற்று சாதனை புரிந்துள்ளார். எனவே அவ்வீரரை நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.வாஞ்சிநாதன், தேக்வாண்டோ சங்க மாவட்ட செயலாளர் திரு.சேதுகார்த்திகேயன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**